**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 361/2015**
**U/s. 379 IPC**
**PROSECUTION WITNESS NO. 7 (LW. 7)**

| | | |
|---|---|---|
| **Name** | : திரு. விஜய் | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** | : | **Age : /2026** |

**2** வது எதிரி ஆஜர் இல்லை**. 355 BNSS** மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**. (1** வது எதிரி **Split up CC No. 76/2026** ல் பிடிக்கட்டளையில் உள்ளார்**. )**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No.361/2015 11.06.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருச்சி காந்திமார்க்கெட் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகபணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.10.2015 ம் தேதி 19.30 மணிக்கு தஞ்சை தெற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நாமக்கல் மாவட்டம் ராசிப்புரம் தாலுக்கா, நாரைக்கிணறு பகுதியைச் சேர்ந்த நடேசன் த/பெ கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 323/2015 சபி. 379 இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கில் களவாடப்பட்ட சொத்தின் மதிப்பு ரூ. 10,00,000/- என்பதால் எக்ஸ்பிரஸ் முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்து, வழக்கு கோப்பினை ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். பின்பு அசல் புகார் மனுவையும், முதல் தகல் அறிக்கையும், கனம் குற்றவியல் நடுவர் நீதித்துறை எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தும், வழக்கின் மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

இவ்வழக்கில் முதல் தகவல் மற்றும் முதல் புகார் மறைக்கபட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக புகார் பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. களவாடப்பட்டதாக சொல்லப்படும் வாகனத்தின் ஆர்சி புத்தகம் போன்ற ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தவறான தகவலின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. காலதாமதாக புகார் கொடுக்கப்பட்டதற்கு எவ்வித விளக்கமும் குறிப்பிட்டு கொடுக்கவில்லை என்று

சொன்னால் சரியல்ல. கிட்டாச்சி வாகனத்தை வாடகைக்கு விட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.